தினமலர்
சென்னை | • வெள்ளி • பிப்ரவரி 14 2020

# கல்லூரி மாணவியர் விளையாட்டு எஸ்.ஆர்.எம்., பல்கலை சாம்பியன்

**சென்னை, பிப். 14–**

சென்னை மாவட்ட கல்லூரி மாணவியருக்கான விளையாட்டு போட்டியில், எஸ்.ஆர்.எம்., பல்கலை, ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.



■ ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வென்ற, எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி.

சென்னை மாவட்ட கல்லூரி மாணவியருக்கான விளையாட்டு போட்டி, அரும்பாக்கம், டி.ஜி., வைஷ்ணவா கல்லூரி மைதானத்தில், நுங்கம்பாக்கம், எம்.ஓ.பி., வைஷ்ணவா கல்லூரி சார்பில், சமீபத்தில் நடந்தது.

இதில், கூடைப்பந்து, வாலிபால், டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடந்தன. சென்னையைச் சேர்ந்த, கலை அறிவியல், பொறியியல் என, 20க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த மாணவியர் பங்கேற்றனர்.

இதில், ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை, எஸ்.ஆர்.எம்., பல்கலை கைப்பற்றியது. செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

வெற்றி பெற்ற மாணவியருக்கு, கோப்பை, பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

170220